செய்தி வெளியீடு எண் : 1263 நாள் : 22.08.2024

# செய்தி வெளியீடு

## வேளாண்மை – உழவர் நலத்துறையில் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 158 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (22.08.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வேளாண்மை – உழவர் நலத்துறையில் 158 உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

வேளாண்மைத் துறைக்கு சிறப்பிடம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதோடு, உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டு, வேளாண் பெருமக்களின் வருவாயினை பன்மடங்காக உயர்த்திட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம், விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கியது, விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம், பயிர் பாதுகாப்பு திட்டம் போன்ற பல்வேறு சீரிய திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

வேளாண்மை–உழவர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் விவசாய பெருங்குடி மக்களை விரைவில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுபேற்ற இந்த மூன்று ஆண்டு காலத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக வேளாண்மை அலுவலர், தோட்டக்கலை அலுவலர் போன்ற தொழில்நுட்ப பணியிடங்கள் மற்றும் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற தொழில்நுட்பம்

சாரா பணியிடங்கள் என மொத்தம் 1554 பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஆய்வக உதவியாளர், அலுவலக உதவியாளர் போன்ற 223 பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, வேளாண்மை–உழவர் நலத்துறையில் காலியாக உள்ள உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 2023–ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்வு மூலம் உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களுக்கு 158 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களில் 5 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்.

உதவி தோட்டக்கலை அலுவலர்கள், அனைத்து வருவாய் கிராமங்களின் அடிப்படை நிலை களப்பணியாளராக இருந்து, தோட்டக்கலை பயிர்களின் பரப்பளவு உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான திட்டங்களில் தோட்டக்கலை அலுவலர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநருக்கு உதவுதல், மண் மற்றும் நீர் மாதிரிகளை சேகரித்தல், தோட்டக்கலை திட்டங்களுக்கான இடு பொருட்களை விநியோகித்தல், பயிர் அறுவடை சோதனைகளை மேற்கொள்ளுதல், இயற்கை பேரிடரின் போது சேத மதிப்பீடு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுத் தருதல் போன்ற பணிகளை மேற்கொள்வர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu